முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 833

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.01.2022, ஞாயிற்றுக்கிழமை

1. அறமாக வாழுகின்ற அரங்கனே
அன்னதான சக்தியே ஞானதேசிகனே
வரமாக யான் ஆறுமுகப்பெருமானும் இனிதே
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(பிலவ வருடம் மார்கழி மாதம் 25ம் நாள், 09.01.2022 ஞாயிற்றுக்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் சக்தி பரவிய திக்கெல்லாம்
ஆறுமுகன் என் சக்தியாக அருள் பரவக்கூடும்
வரமென அரங்கனை தொடர்ந்து வருகின்ற தொண்டர்கள் மூலம்
வையகமே சுத்தம் செய்யப்படும்
3. செயல்வழியும் சேவை வழியும்
சித்தி தந்து அரங்கனுக்கு ஆறுமுகன் யான் தயவாக உடனிருக்க
அரங்கன் நாமஜெபம் தரணியில் எங்கெல்லாம் கேட்கப்படுகின்றதோ
அங்கெல்லாம் ஆறுமுகன் என் அருளும் துணையும் ஆற்றலாக உடனிருக்கும்
4. ஆகவே கலியுக மக்கள் அரங்கன் நாமஜெபத்தை போற்றி
அன்னதான சேவையை உலகமெங்கும் தொடர்ந்து செய்ய
செய்யவே உலகினில் ஆறுமுகன் என் சித்தி சூட்சும சக்தியாகப் பரவி
ஐயமற உலகம் பாதுகாப்புபெறும் அகிலமதில் பேருலக மாற்றம் அரங்கன் வழியே இனிதே நடந்தேறும்
5. நடந்தேற ஞானவழிகளை உலக மக்கள்
நம்பிக்கைக் கொண்டு அரங்கன் தரும் உபதேசத்தை
ஞான உபதேசமாக ஏற்று
உலக மக்கள் தொடர்ந்துவர
6. வருகவே உலகை வதைக்கின்ற கொடுமையான பேரிடர்களும் கூட
வையகத்தை விட்டு அகன்றோடி
உலகமக்களுக்கு உயிர் பாதுகாப்பு
உண்மைபட ஞானவான்கள் தலைமைகொண்ட ஆட்சியாகவும்
7. ஞான ஆட்சிகள் உலகமெங்கும் பரவி
ஞானிகள் வெளிப்பாடு மிகுந்து
மிகுந்துமே ஞான யுகமாற்றமாக
இந்த யுகமே அற்புதம்பட தேற்றங்காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–